7. ஒழுங்குப் பிரச்சினை

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் அவையில் இல்லாதது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய பகுதியிலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரைத் தவிர, ஏறக்குறைய அநேகமாக அனைத்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இந்த அவையில் இல்லை. மிக முக்கியமாக, பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இருக்கிற திரு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கூட இல்லாத காரணத்தால், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைக் கூட அளிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே திடீரென்று ஒட்டுமொத்தமாக லீவ் போட்டிருக்கிறார்களா அல்லது சபையைப் புறக்கணித்து இருக்கிறார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே. .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே நானே தீர்ப்பு சொல்லிவிடலாமே. (குறுக்கீடு) ஓ. .உங்கள் ஏற்பாட்டில்தான் போய் இருக்கிறார்கள் என்கிறீர்களா? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய கூட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிற காரணத்தாலே, அவர்கள் சென்று இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே சட்டமன்றத்தினுடைய பணிகளைச் செய்வதற்கு என்னைப் பணித்து இருக்கிறார்கள். நான் அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Solitary Reaper ! (சிரிப்பு) இதில் ஒழுங்குப் பிரச்சினை ஏதும் இல்லை.

6. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் தலைவரது சார்பாக 1989–90 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவின் முதல் நான்கு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்,